பாடம் 9

# செல்லப்பிள்ளை

***நீ மிகவும் விரும்பியது உனக்கில்லாமல் பிறருக்குக் கிடைத்தபோது உனக்குக் கோபம் வந்ததுண்டா? 10 சகோதரர்கள் தாங்கள் விரும்பியது தங்கள் தம்பிக்குக் கிடைத்தபோது தங்கள் தம்பிக்குத் தீங்கு செய்வதற்குத் திட்டமிட்டனர்.***

யோசேப்புக்குப் பத்து அண்ணன்கள் இருந்தார்கள். அவர்களுக்கு யோசேப்பைப் பிடிக்கவே பிடிக்காது. தாங்கள் செல்லும் இடங்களுக்கு அவனை அழைத்துச்செல்ல மாட்டார்கள்.

ஆனால், அப்பா யாக்கோபுவுக்கு, யோசேப்பு செல்லப்பிள்ளை. ஒருமுறை பல வண்ணங்கள் கொண்ட மிக அழகிய அங்கி ஒன்றை யோசேப்பிற்குக் கொடுத்தார். பல வருண அங்கியை அப்பா அவனுக்குக் கொடுத்தது அவனது அண்ணன்களுக்கு எரிச்சலைத் தந்தது. அந்தப் பல வருண அங்கி தங்கட்குக் கிடைக்காததால் தம்பிமேல் பொறாமை கொண்டனர்.

யோசேப்புக்கு மிகவும் பெருமை இருப்பதாக நினைத்தனர். இந்த நினைவு அவர்களுக்கு யோசேப்பின்மேல் கோபத்தை அதிகப்படுத்தியது.

ஒருமுறை யோசேப்பு ஒரு கனவு கண்டான். அந்தக் கனவில், தனது கதிர்க்கட்டைபத்து அண்ணன்களின் கதிர்க்கட்டுகளும் தன் தம்பி பென்யமீனின் கதிர்க்கட்டும் வணங்கியதாகக் கண்டான். மற்றொருமுறை சூரியனும், சந்திரனும், பதினொரு நட்சத்திரங்களும் தன்னை வணங்கியதாகக் கண்டான். இந்த இரு கனவுகளையும் கேட்டு அவன் சகோதரர்கள் பயங்கரக் கோபமும் வெறுப்பும் கொண்டனர். யாக்கோபிடம், “இவனை நாங்கள் வணங்குவோமா? மேலும் நீங்களும், அம்மாவும்கூட அவனை வணங்குவதாகச்




**மனன வசனம்**

**நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்.**

**யோவான் 15:12.**

சொப்பனம் கண்டதாகச் சொல்கிறானே'' என்று தங்களின் வெறுப்பை உமிழ்ந்தனர். யோசேப்பிடம் யாக்கோபு, ''நாங்கள் உன்னை வணங்க வருவோமோ'' என்று அவனைக் கடிந்துகொண்டார்.

யோசேப்பின் சகோதரர்கள் அடிக்கடி தங்களது அப்பாவின் ஆடுகளை மேய்ச்சலுக்காகத் தூர இடங்களுக்கு ஓட்டிச்செல்லுவார்கள். யாக்கோபு ஒருமுறை தன்னுடைய செல்லப்பிள்ளை யோசேப்பிடம், அவன் சகோதரர்களைச் சென்று பார்த்து வருமாறு கூறினார். அவ்வாறே யோசேப்பும், மிகவும் சந்தோஷமாகத் தனது



அண்ணன்களைப் பார்க்கச் சென்றான். அவன் வருவதை அவன் அண்ணன்கள் பார்த்துவிட்டனர்.

யோசேப்பு அணிந்துவந்த பலவருண அங்கி அவர்களது எரிச்சலை மேலும் அதிகமாக்கியது. 'சொப்பனக்காரன் வருகிறான்' என்று அவனைப் பார்த்துக் கருவினர். யோசேப்பைக் கொல்லத் திட்டமிட்டனர்.

யோசேப்பின் மூத்த அண்ணன் ரூபன் அதற்குச் சம்மதிக்கவில்லை; ''தம்பியைக் கொல்ல வேண்டாம்; அவனை இந்தத் தண்ணீரற்ற குழியில் போட்டுவிடுவோம்; அவனால் இந்த ஆழமான குழியினின்று வர முடியாது; தானாகவே செத்துவிடுவான்'' என்று ரூபன் அவர்களிடம் கூறினான். ஆனால், மற்றவர்களுக்குத் தெரியாமல் யோசேப்பைக் காப்பாற்றத் திட்டமிட்டான்.

மகிழ்ச்சியுடன் அண்ணன்களைப் பார்க்கவந்த யோசேப்புக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவனது அழுகை, கெஞ்சல், கதறல் எதையும் கண்டுகொள்ளாது குழியில் போட்டனர்.

## செய்தி

**யாவரையும் நேசிக்க தேவன் எனக்கு உதவுகிறார்.**

ரூபன் எங்கோ வெளியே சென்றிருந்த சமயத்தில் அவ் வழியாக எகிப்துக்குச்சென்று கொண்டிருந்த இஸ்மவேலரிடம், யோசேப்பை அடிமையாக விற்றுவிட்டனர். திரும்பி வந்த ரூபன் அதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்து, "நான் அப்பாவுக்கு என்ன பதில் சொல்வேன்?" என அழுதான்.

ஓர்ஆட்டை அடித்து யோசேப்புவின் பல வருண அங்கியை அதன் இரத்தத்தில் தோய்த்தனர். காட்டு மிருகம் தம்பியைஅடித்துக்கொன்றிருக்கலாம் எனஅப்பாவை நம்ப வைத்தனர்.

யாவரையும் பிரிந்து தூர தேசத்திற்கு யோசேப்பு அடிமையாகக் கொண்டு செல்லப்பட்டான்.

செல்லமே, நாம் யாவருடனும் அன்பாக இருக்கவே தேவன் விரும்புகிறார்.

**புதிர் 9**

***செய்முறை:*** **யோசேப்பு தன் இரண்டு சொப்பனங்களிலும் கண்ட பொருட்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டறிய கீழுள்ள வாக்கியங்களில், பழங்களின் பெயரை அடித்துவிடு; கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் அவற்றை வரைந்து வண்ணமிடு.**

*ஆப்பிள் / / அரிக்கட்டுகள் பப்பாளி சூரியன் கொய்யா*

*சந்திரன் மாம்பழம் / / நட்சத்திரங்கள்.*

